


நிகழ்ச்சியில் சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் கதிரவன் பேசிய காட்சி. அருகில் கல்லூரி முதல்வர் நெல்சன் விமலநாதன் மற்றும் பலர் உள்ளனர்.

## வேலூர் ஊரிசு கல்லூரியில்

# புதிய கல்வி குறித்த ஆலேசானை கூட்டம்

வேலூர், ஜூலை.29-

வேலூர் ஊரிசு கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்க தொடக்க விழா மற்றும் புதிய கல்வி கொள்கை குறித்த ஆலோசனை கூட்டம் இன்று நடந்தது

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் நெல்சன் விமலநாதன் தலைமை தாங்கினார். பேராசிரியர் செந்தில்குமார் வரவேற்றார். செஞ்சிலுவை சங்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அமீனாள்பீபி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சங்க செயல்பாடுகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கி பேசினார்.

சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் கதிரவன், ரவிந்தரநாத் ஆகியோர் மத்திய அரசு கொண்டு வந்துள்ள புதிய கல்வி கொள்கையின் நன்மை தீமைகள் குறித்து விளக்கி பேசினர்.

ஊரிசு கல்லூரி துணை முதல்வர் ஆனி கமலா புலோரன்ஸ், நிதியாளர் காலேப்நோபல் சந்தர், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் இயற்பியல் துறை துணை பேராசிரியர் பா. தினகரன் நன்றி கூறினர்.